# 12

# மிக உயர்ந்த கனமுள்ள சபை

*"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" (எபி. 12:22-24).*

நீங்கள் மிகவும் அருமையாய் நேசிக்கும் வகையில் உங்களுக்கு என்ன தனிச் சிறப்பு தரப்பட வேண்டும்? மற்றும் நீங்கள் மதிக்கின்ற மிகவும் தேர்ந்து கொள்ளப்பட்ட விருது என்ன? ஒரு கல்விச் சாதனையா? செல்வந்தர்களின் வட்டாரத்திற்குள் ஒரு திடீர்ப் பிரவேசமா? ஆச்சரியப்படத் தக்கதான ஒரு விளையாட்டுச் சாதனையா? மனிதரால் தரப்படும் ஒரு மதிப்பா? உங்கள் குடும்பத்தில் நிலையான வெற்றியா?

நான் ஒரு கல்லூரி மாணவனாய் இருக்கையில், நான் வாழ்ந்த விடுதியில், ஒரே தளத்தில் உள்ள பல இளைஞர்களும் ஒவ்வொரு நாள் மாலைப் பொழுதிலும் வேத வாசிப்பு மற்றும் ஜெபம் செய்வதற்காகக் கூடுவது உண்டு. அவ்வப்பொழுது நாங்கள், எங்களுக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை எண்ணிப் பார்ப்பதுண்டு அல்லது ஒவ்வொரு இளைஞரும் தன் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுண்டு. ஒரு நாள் மாலை வேளையில், எங்களது ஜெப வழிபாட்டை முன்னின்று நடத்திய இளைஞர், "வேதாகமத்தில் உள்ள நபர்களில் யாரைப் போல் இருப்பதற்கு நீங்கள் மிகவும் விரும்புகின்றீர்கள்?" என்ற கேள்விக்கு நாங்கள் ஒவ்வொருவரும் பதில் அளிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஒருவர், "நான் ஆபிரகாமைப் போலிருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர் விசுவாசத்தில் வல்லவராய் இருந்தார்" என்று கூறினார். இன்னொருவர், "நான் மோசேயைப் போலிருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர் தேவனைக் கண்டார்" என்று கூறினார். இன்னொருவர், "நான்

அப்போஸ்தலர்களில் ஒருவராக இருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர்கள் இயேசுவோடு இருந்தார்கள்" என்றார். இன்னும் வேறொருவர், ''நான் ஏனோக்காக இருக்க விரும்புவேன், ஏனென்றால் அவர் தேவனோடே நடந்தார்'' என்று கூறினார். ஒவ்வொரு இளைஞரும் வேதாகமத்தில், குறிப்பிடத்தக்க பண்பைக் காட்சிப்படுத்தியிருந்த அல்லது தனிப்பட்டதொரு கனத்தைப் பெற்றிருந்த யாரேனும் ஒருவரைத் தேர்ந்து கொண்டு, தான் அந்த மனிதரின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தால், அதை மாபெரும் சிலாக்கியமாய்க் கருதுவதாகக் கூறினர்.

இன்னொருவருடைய சாதகமான சூழ்நிலையை ஏக்கத்துடன் கண்ணோக்கிக் கொண்டிருந்து, நமக்கு அளிக்கப்பட்டுள்ள விசேஷித்த வாய்ப்புக்களைக் கண்ணோக்காமல் விடுதல் என்பது எப்பொழுதுமே மிகவும் சுலபமானது என்றே நான் யூகிக்கின்றேன். கிறிஸ்தவர்களாகிய நாம் மேன்மையான நமது நிலையையும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற வளம் மிக்க பாரம்பரிய செல்வங்களையும் தொடர்ந்து நம் சிந்தையில் கொண்டிருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எபிரெயர் 12:22-24 வசனப் பகுதியானது புதிய ஏற்பாட்டில் உள்ள மாபெரும் நினைவூட்டும் குறிப்புகளில் ஒன்றாகும். இது, கிறிஸ்துவுக்குள் வருகையில் கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கின்ற விலைமதிப்பற்ற செல்வங்கள் சிலவற்றைத் தொகுத்துரைக்கின்றது.

> *நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப் பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கை யின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" (எபி. 12:22-24).*

இந்த எழுத்தாளர், கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவத்திற்கும் தன் வாசகர்கள் மனம் மாறியதன் மறைகருத்துடன் இவ்வசனப் பகுதியை முடித்து வைக்கிறார். "வந்து சேர்ந்தீர்கள்" என்பது அவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்ட காலம் பற்றிய உருவக மொழிநடையாக உள்ளது. இதில் அவர், கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்டுள்ள ஆவிக்குரிய தனிச் சிறப்பான பலன்கள் பன்னிரெண்டை அட்டவணைப்படுத்துகின்றார். இந்தப் பயன்களில் ஒன்றை அவர், ''முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை'' என்ற சொற்றொடரினால் விவரிக்கின்றார். ''முதற்பேறானவர்களின்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கப் பெயர்ச் சொல்லானது பன்மை வடிவில் உள்ளது, மற்றும் இதனுடன் தொடர்புடையதாய்ப் பயன்படுத்தப் பட்டுள்ள கிரேக்க வினைச் சொல்லும் கூட பன்மை வடிவிலேயே உள்ளது; இவ்விதமாக, அவர் கிறிஸ்தவர்களை "முதற்பேறானவர்களின் சர்வசங்க மாகிய சபை'' என்று உண்மையில் குறிப்பிட்டார். விவரிப்பான

இச்சொற்றொடரானது புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்த ஒரே இடத்தில் மட்டுமே உள்ளதாகவும், கிறிஸ்தவர் அல்லது கிறிஸ்தவள் கிறிஸ்துவின் சபையாக வாழுகையில் அவருக்கு/அவளுக்கு அளிக்கப்படும் விசேஷித்த நிலைப்பாட்டை விளக்கி உரைப்பதாகவும் இருக்கின்றது.

## சத்தியம்

எபிரெயருக்கு எழுதிய நிருபமானது உற்சாகம் இழக்கச் செய்யப்பட்ட மற்றும் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை விட்டுவிடும் விளிம்பில் இருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. துன்புறுத்தல்களும், அவர்களைச் சூழ்ந்துள்ள பல தெய்வ வணக்கக்காரர்களின் நெருக்கங்களும், அவர்களின் கிறிஸ்தவப் பயணத்தின் ஒவ்வொரு அடி வைப்பிலும் வேதனையுடன் குத்துகிற முட்களைப் போலிருந்தன. அவர்களில் பலர் தாங்கள் இந்த இடைவிடாத துன்புறுத்தலில் இருந்து விடுதலையைக் காண்பதற்காக, தாங்கள் மனமாறி விட்டு வந்திருந்த யூதமார்க்கத்திற்குத் திரும்பும்படியாக சலிப்பினால் சோதிக்கப்பட்டிருந்தார்கள்.

ஏவுதல் பெற்ற எழுத்தாளர் இந்த நிருபம் முழுவதிலும், தமது வாசகர்கள் கிறிஸ்தவத்தை மேன்மை மிக்க சிலாக்கியமாகவும், தேவன் மனிதருக்குக் கொடுத்தவற்றிலேயே மிக அழகிய ஆசீர்வாதமாகவும் மதிக்க வேண்டியது ஏன் என்பதற்கு அவர்களுக்குப் பல்வேறு காரணங்களைக் கொடுத்தார். கிறிஸ்துவிலிருந்து திரும்பி யூதத்துவத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்லுதல் என்பது தாழ்வானதற்காக உயர்வானதையும், நிழலுக்காக நிஜத்தையும் கொடுத்து வாங்குவது போலானது என்பதே இப்புத்தகத்தின் மேலோங்கிய முடிவாக உள்ளது. எபிரெயர் 12:22-24ல் அவர், கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கின்ற முதன்மையான பலன்களை ஒரு வாக்கியத்தில் பொதிந்து வைத்தார். ஒரு மொத்தமான கருத்தில் அவர், கிறிஸ்தவர் வேறு எந்த மதத்திற்காவது கிறிஸ்தவத்தை ஒருக்காலும் மாற்றாகக் கொடுத்து விடக் கூடாது என்ற கருத்தில் இணக்கம் கொள்வதற்குப் போதுமான சான்றைக் கொடுத்தார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவனுடைய மக்கள் நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட இடமான சீனாய் மலையிடத்தில் வந்தார்கள். அதன் அக்கினி, புகை, இடி மற்றும் மின்னல் ஆகியவைகள் பாவத்தைக் குறித்து தேவனின் நீதியையும் நியாயத்தையும் வெளிப்படுத்தின. இதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவர்கள் சீயோன் மலையினிடத்திற்கும் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும் வருகின்றனர். அவர்கள் கிருபையின் யுகமாகிய கிறிஸ்துவின் யுகத்தின் போது தேவனிடம் வந்து, பரம எருசலேமில் ஆவிக்குரிய வகையில் பங்கேற்கின்றனர். அவர்கள் இவ்வாறு செய்கையில், தேவனுடைய பிரசன்னத்தில் அகம் மகிழ்ந்து துதி பாடும் தூதர்களின் சேனைகளுடனான ஐக்கியத்தில் பிரவேசிக்கின்றனர். அவர்கள் பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ளவர்களாகிய முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையில் பிரவேசித்து, மற்றும் பழைய ஏற்பாட்டு யுகத்தில் இருந்தவர்களும் இப்பொழுது பூரணராக்கப்

பட்டுள்ளவர்களுமாகிய நீதிமான்களின் ஆவிகளுடன் சேர்ந்துள்ளனர். இயேசுவின் பலியினால் ஆன அவருடைய இரத்தத்தினால் அவர்கள் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய அவரிடத்தில் வந்துள்ளனர். சுருக்கமாகக் கூறுவதென்றால், இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொள்வதினால் அவர்கள் உலகத்தின் இரட்சிப்புக்கு தேவனுடைய திட்டத்தின் இறுதி நிறைவேற்றத்தில் பங்கேற்றுள்ளனர்.

ஆகையால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் யுகத்திற்கே உரிய தனிச் சிறப்புள்ள பரலோக ஈவுகளைப் பெற்றுள்ளனர். அவர்கள், கிருபைக்குப் பதிலாக சட்டத்தையும், இரக்கத்திற்குப் பதிலாக நீதியையும் வலியுறுத்திய மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்வதில்லை. அவர்கள் பரம உலகையும் நமது பூமிக்குரிய உலகையும் உள்ளடக்குகின்ற தேவனுடைய விதியாய் உள்ள பரம எருசலேமில் பங்கேற்கின்றனர். அவர்கள் தேவனுக்குத் தங்கள் ஊழியம், துதி மற்றும் அன்பு ஆகியவற்றில், ஆராதனையிலும் ஊழியத்திலும் தேவனுடைய சித்தத்தை இடைவிடாமல் செய்கின்ற ஆயிரம் பதினாயிரமான, எண்ணிக்கைக்கு அடங்காத தூதர்களுடன் இணைகின்றனர். கிறிஸ்தவர்கள், உயர்வான தயவு பெற்றுள்ள முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையிடம் வந்து அவர்களில் ஒரு பாகமாக வாழ்கின்றனர். அவர்கள் இப்பொழுது நித்தியத்திலுள்ள பழைய ஏற்பாட்டுக் காலத்தின் நீதிமான்களுடைய ஆவிகளுடன் சேர்ந்துள்ளனர். அவர்கள் இயேசுவின் மூலமாக, தேவனிடத்தில் வந்து, மற்றும் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக கிருபையினால் தரப்பட்டுள்ள புதிய உடன்படிக்கையினிடத்தில் வந்துள்ளார்கள்.

---

ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்படுதல்
என்பது, நாம் பெற்றிருக்கும் மற்ற எந்த மதிப்பைக் காட்டிலும்
நமக்கு அதிகம் மகிழ்வளிக்கக் காரணமாயிருக்க வேண்டும்.

---

ஆசீர்வாதங்கள் பற்றிய இந்த விபரப்பட்டியலில், "முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை" என்ற குறிப்பானது நமக்கு விசேஷித்த ஆர்வத்திற்குரியதாக உள்ளது. "முதற்பேறானவர்" என்ற வார்த்தையானது மிக உயர்ந்த மதிப்பை உணர்த்துவதால் வழக்கத்திற்கு மாறான தனிச் சிறப்புடையதாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் இந்தச் சொற்றொடரானது ஆவல் கொள்ளும் பெருமதிப்புடன் கையாளப்பட்டது. இது *முன்னுரிமையின்* மதிப்பை அர்த்தப்படுத்தக் கூடியது, ஏனெனில் ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகளில் முதல் பிறந்தவர் இருமடங்கு மதிப்பை பெற்றார். இவ்வார்த்தையானது *தகுதி நிலையின்* மதிப்பையும் சுட்டிக்காட்டியது, ஏனெனில் இது ஒருவரின் மேன்மை அல்லது பண்பின் காரணமாகக் கொடுக்கப்பட்ட தனிச் சிறப்பையும் குறிப்பிட முடிந்தது.

இவ்விரு காரணங்களுக்காகவும் இயேசு வேத வசனங்களில், முதற்பேறானவர் என்று குறிப்பிடப்படுகின்றார். முதலாவது, அவர் *முன்னுரிமை*

யில் முதற்பேறானவராக இருக்கின்றார், ஏனெனில் அவர் மரித்தோரிலிருந்து தம்முடைய உயிர்த்தெழுதலில் நமக்கு முந்தினவராக உள்ளார். பவுல், ''அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்'' (கொலோ. 1:18) என்று எழுதினார். இரண்டாவது, அவர் தகுதி நிலையில் முதற்பேறானவராக உள்ளார். தேவன் எல்லா வற்றிற்கும் மேலான முதலிடத்தை அவருக்குக் கொடுத்ததன் மூலம் அவரை மேன்மைப்படுத்தியுள்ளார். மேலும் பவுல், "அவர் அதரிசனமான தேவனு டைய தற்சுரூபமும், சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" (கொலோ. 1:15) என்றும் எழுதினார் (இ.வ. எபி. 1:6). இவ்வசனத்தில் அவர் முன்னு ரிமையில் முதற்பேறானவர் என்று குறிப்பிடப்படுவதில்லை, ஏனென்றால் அவர் படைக்கப்பட்டவரல்ல, ஏனெனில் அவர் பிதாவாகிய தேவனைப் போலவே முடிவற்ற வாழ்வுடையவராக, நித்தியத்திலிருந்து நித்தியம் வரைக்கும் இருப்பவராக உள்ளார். இதற்கு மாறாக இவ்வசனமானது, இவரை, உலகத்தைப் படைத்த *கர்த்தராக*, மேன்மையான தகுதி நிலையில் முதற்பேறானவராகக் காண்பிக்கின்றது.

''முதல் பேறானவர்'' என்ற வார்த்தையானது இயேசுவுடன் தொடர்புடைய வகையிலான அதன் பயன்பாட்டைப் போலவே தனிச் சிறப்புக்குரிய கருத்தமைவில் சபைக்கு உருவகமாகப் பயன்படுத்தப் படுகின்றது. சபை என்பது, முதற்பேறான மகனுக்குரிய இரட்டை மதிப்புப் போன்று தேவன் ஈவுகளை அருளிச் செய்துள்ள "முதற் பேரானவர்களின் சர்வசங்கமாகிய சபையாக'' உள்ளது. மீட்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சபை என்ற வகையில் கொண்டுள்ள உயர் தயவுள்ள நிலைப்பாட்டிலிருந்து அவர் பொழிந்தருளும் இந்தக் கிருபை உதயமாகின்றது; இது முன்னுரி மையின் அடிப்படையில் அமைந்தது அல்ல; இது நாம் மற்றவர்களை விட மேன்மையானவர்கள் என்பதால் கொடுக்கப்பட்டது அல்ல; மாறாக, இது தேவனுடைய நீதியாக்குதலின் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிலைப்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது.

## விஸ்தரிக்கப்பட்ட சத்தியம்

மகிமையுள்ள இந்த சத்தியமானது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி "தோலுரித்துக் காட்டப்பட்டு" விவரிக்கப்படுகின்றது.

### *முன்னோடியாக இருப்பதைக் காட்டிலும் மகாபெரியவர்*

யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் யுகத்தில் வாழ்ந்திருந்ததில்லை. இதன் விளைவாக, அவர் ஒருக்காலும் சபையில் இருந்ததில்லை. அவர் தேவனுடைய மாபெரும் மனிதர்களில் ஒருவராயிருந்தார், ஆனால் அவர், கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை ஒருக்காலும் பெற்றிருந்தது இல்லை. இந்தக் காரணத்தினால் யோவானைப் பற்றி இயேசு, ''ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக

*ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக் கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத். 11:11) என்று உரைத்தார். வருகிறவராயிருந்த மேசியாவுக்கு வழியை ஆயத்தப் படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவதைக் காட்டிலும் வேறு எந்தப் பெரிய பாராட்டை ஒருவர் பெற்றுக் கொள்ள முடியும்? கிறிஸ்துவுக்கு முன்னோடியாக இருந்த யோவானின் காலடிகளில் இருந்த பயன்களைக் காட்டிலும் இராஜ்யத்தில் உள்ளதின் பலன்கள் பெரியவைகளாய் உள்ளன என்று இயேசு மறைமுகமாய்க் குறிப்பிட்டார். இராஜ்யத்தில் வைக்கப் படுவதன் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவரும், கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தும் பேற்றைப் பெற்ற யோவானைக் காட்டிலும் பெரிய மதிப்பைப் பெறுகின்றார்.*

## *அற்புதங்கள் செய்வதைக் காட்டிலும் பெரியது*

*இயேசுவின் ஊழியத்தினுடைய முற்பகுதியில் விவரிப்பான அறிவுறுத் தல்களுடன் கூடிய வரையறைக்குட்பட்ட கட்டளை கொடுக்கப்பட்டவர் களாய் எழுபது சீஷர்கள் அனுப்பப்பட்டனர். இயேசு அவர்களை இருவர் இருவராக "முற்பட்ட குழுக்களாக" தாம் சென்று பிரசங்கிக்க மற்றும் போதிக்கவிருந்த இடங்களுக்கு தமக்கு முன்னதாக அனுப்பினார் (லூக். 10:1). அவர், அற்புதங்கள் செய்யவும் அசுத்த ஆவிகளைத் துரத்தவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார். அசுத்த ஆவி பிடித்திருந்தவர்களிடத்தில் இயேசுவின் நாமத்தினாலே அவர்கள் கட்டளையிட்ட பொழுது, அவைகள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்த படியால் அவர்கள் திரும்பி வந்த பொழுது வெற்றி முழக்கத்துடனும், அக்களிப்புடனும் இருந்தனர்.*

*அற்புதங்கள் செய்வது என்பது எது போன்று இருக்கும் என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. சாவுக்கேதுவான வியாதி யுள்ளவரிடம் சென்று அவரை அற்புதவிதமாய்க் குணப்படுத்துதல் என்பதை (கற்பனையில்) சித்தரித்துக் கொள்ளுங்கள். உங்கள் மூலமாக தெய்வீக வல்லமை வெளிவந்து, அப்படிப்பட்ட குணத்தையளிக்கும்படி உங்களுக் குத் திறன் அளித்திருந்தால் நீங்கள் எவ்வாறு அகம் மகிழுவீர்கள்! முதல் நூற்றாண்டின் முடிவில் - வேதாகமம் என்ற - தேவனுடைய முழுமையான வெளிப்படுத்துதலுடன் அற்புதங்களின் காலம் முடிவுக்கு வந்துவிட்டது. இன்றைய நாட்களில் அற்புதங்கள் செய்யவும் வல்லமை என்பது ஒருவருக்கு(ம்) இல்லாதிருப்பினும், அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமையின் மீது அக்களிப்புடன் சீஷர்கள் திரும்பி வந்தது ஏன் என்று இன்னமும் நாம் சுலபமாய்க் காண முடியும்!*

*இந்த சீஷர்கள் தங்கள் அகமகிழ்வை இயேசு அறியச் செய்த பொழுது, அவர்களிடத்தில் அவர் குறிப்பிடத்தக்க கூற்று ஒன்றை உரைத்தார்: "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுக்க மாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள்*

நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" (லூக். 10:19, 20). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர்களிடத்தில் நமது கர்த்தர், அற்புதங்கள் செய்தல் என்பதைக் காட்டிலும் பெரியதான ஒன்றின் மீது அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று உரைத்தார். ஜீவ புத்தகத்தில் அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருத்தல் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை அருளப்பட்டிருப்பதைக் காட்டிலும் பெரியதாக இருந்தது!

இந்த சீஷர்கள், மோசேயின் நியாயப்பிரமாணம் இன்னமும் அமுலில் இருந்த பொழுது வாழ்ந்தார்கள் (எபி. 9:15-17). மோசேயின் யுகத்தில், ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருத்தல் என்பது, அற்புதங்கள் செய்யும் வல்லமையுடைவராய் இருத்தலைக் காட்டிலும் அதிகம் மதிப்புடையதா யிருந்தால், கடைசிக் காலமும், தேவனுடைய மீட்பின் திட்டத்தினுடைய நிறைவேற்றத்தின் காலமுமான கிறிஸ்துவின் யுகத்தில், ஒருவருடைய பெயரானது ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருத்தல் என்பது இன்னும் எவ்வளவு அதிகம் மதிப்புடையதாக இருக்க வேண்டும்! எபிரெயருக்கு (நிருபம்) எழுதியவருடைய கூற்றின்படி, கிறிஸ்துவின் யுகத்தில், சபையில் உள்ளவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை என்று, மிக உயர்ந்த தயவு பெற்றவர்கள் என்று குறிப்பிடப்படுவதில் வியப்பெதுவும் இல்லை!

## பூமியின் மதிப்பு மிக்க எந்த மதிப்பைக் காட்டிலும் பெரியது

ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்படுதல் என்பது, நாம் பெற்றிருக்கும் மற்ற எந்த மதிப்பைக் காட்டிலும் நமக்கு அதிகம் மகிழ்வளிக்கக் காரணமாயிருக்க வேண்டும். பிலிப்பி நகரில் இருந்த உடன் வேலையாட்களின் (ஊழியர்களின்) "(பெயர்கள்) நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது" (பிலி. 4:3) என்று பவுல் அவர்களுக்குக் குறிப்பிட்டார். சர்தை சபையில், இந்த உலகத்தின் கேடுபாடுகளினால் தீட்டுப்படாதபடிக்குத் தன் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்த ஒவ்வொருவருக்கும், "ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல்" (வெளி. 3:5) என்று இயேசு உரைத்தார். ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் அக்கினிக் கடலிலே எறியப்படுவான் என்று யோவான் கூறினார் (வெளி. 20:15).

ஏகாதிபத்திய நகரான ரோமாபுரியில் இருந்த நிர்வாகிகள், ரோமக் குடிமக்கள் அனைவருடைய பெயர்களும் அடங்கியிருந்த ஒரு பெயர்ப் பட்டியலை வைத்திருந்தனர். முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களுக்குப் பவுல், ரோமக்குடியுரிமைப் பட்டியலைக் காட்டிலும் மிக மிக முக்கியமான பட்டியல் ஒன்று பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளதென்று கூறினார். அந்தப் பதிவேட்டில் ஒருவருடைய பெயர் காணப்படும் பொழுது, அவர் எல்லாவற்றிலும் மிக உயர்ந்த மதிப்பைக் கொண்டுள்ளார். இது தேவனால் இரட்சிக்கப்பட்டவர்களின் (பெயர்கள் அடங்கிய) பட்டியலாக உள்ளது. இந்த மதிப்பு சபைக்குரியதாகும் என்று எபிரெயருக்கு (நிருபம்) எழுதியவர் கூறினார்!

## *பழைய ஏற்பாட்டின் மதிப்பைக் காட்டிலும் பெரியது*

*எபிரெயர் 11ம் அதிகாரமானது "தேவன்மேல் விசுவாசம் கொண்டதற் காகப் புகழ்ச்சி பெற்றவர்களின் அறை வீடு" என்று அழைக்கப்பட்டுள்ளது. ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், சாராள், யாக்கோபு, யோசேப்பு மற்றும் மோசே உட்படப் பதினேழு பேர்களின் (ஆண் மற்றும் பெண்) வாழ்வுச் சுருக்கம் இந்த மேன்மையான அதிகாரத்தில் தரப்பட்டுள்ளன. உலகில் உள்ள அனைவரும் நினைவுகூரும்படியாகப் பழைய ஏற்பாட்டின் இந்த நபர்கள் யாவரும் இந்த விசேஷித்த பகுதியில் வைக்கப்படும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். திகைப்புக்குரிய வகையில் இதன் எழுத்தாளர், இந்தக் கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகிகள் ஆகியோரைப் பற்றி, "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும்; வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபி. 11:39, 40) என்று கூறினார். "விசேஷித்த நன்மையானது" என்பது கர்த்தருடைய வருகையையும் சபையையும் குறிக்கின்றது. முதற்பேறானவர்களின் சபை என்ற வகையில் நாம், எபிரெயர் 11ல் காணப்படும் மக்கள் எதிர்பார்ப்புடன் நோக்கியிருக்க மட்டுமே முடிந்ததான ஒரு மதிப்பினால் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளோம். அவர்கள் இதன் உண்மை நிலையைக் கண்டதில்லை; இதை அவர்கள் ஒரு வாக்குத்தத்தம் என்ற வகையில் மட்டுமே சுவைத்திருந்தார்கள்.*

## *உலகத்திற்குரிய நிலைப்பாடு எதைக்காட்டிலும் பெரியது*

*சார்லஸ் ஹோட்ஜ் அவர்கள் ஒரு காலத்தில், அமெரிக்காவின் கிறிஸ்துவின் சபைகளிலேயே பெரியவைகளில் ஒன்றான நாஷ்வில்லில் உள்ள மேடிஸன் சபையில் உரையாற்றிக் கொண்டிருந்தார். அங்கிருக்கையில், அவர்களுடைய கட்டிடம் எவ்வாறு வடிவமைக்கப்பட்டிருந்தது மற்றும் அங்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்று காண்பதற்காக அவர் அவ்விடத்தைச் சுற்றிப் பார்த்து நடந்து கொண்டிருந்தார். ஒரு அறையில் முதிர் வயதான ஒரு பெண், தபாலில் அனுப்புவதற்காகக் கடிதங்களை மடித்துக் கொண்டிருந்ததை அவர் கண்டார். "நீங்கள் யார்?" என்று அவர் கேட்டார். அப்பெண்மணி உடனடியாக, "நான் இந்த சபையில் முக்கியத் துவம் வாய்ந்த ஒருத்தி" என்று பதில் அளித்தார். அவர், "அப்படியா? அது எவ்வாறு உங்களுக்குத் தெரியும்?" என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி, "ஏனென்றால் சகோதரர் நார்த் அவர்கள் அவ்வாறு கூறினார்" என்றார்கள். அவர்களின் மாபெரும் ஊழியரான ஐரா நார்த் அவர்கள், அப்பெண்மணியின் ஊழியமானது, மற்ற எவரொருவரின் ஊழியத்தைப் போலவே முக்கியமானது என்றும், அப்பெண்மணியானவர், மூப்பர்கள், உதவிக்காரர்கள் மற்றும் பிரசங்கியார்கள் போலவே முக்கியமானவர் என்றும் சரியாகவே அப்பெண்மணியிடம் கூறியிருந்தார்!*

*தேவன், "நீங்கள் எனது சபைக்குள் வரும் பொழுது, உங்கள் மீது நான் முதற்பேறானவர்களின் சபை என்ற பெயரை அளித்து, மதித்து அவ்வாறே*

*உங்களை அழைக்கின்றேன். நான் யோவான் ஸ்நானனுக்குக் கொடுத்திருந்த தைக் காட்டிலும் தனிச் சிறப்புள்ள நிலைப்பாட்டையும் ஊழியத்தையும் உங்களுக்குத் தருகிறேன். நான் இந்த மதிப்பை சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லாருக்கும் பொழிகின்றேன். நீங்கள் என் சபையில் இருந்தால், இணையற்ற முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றீர்கள்" என்று கூறுகின்றார்.*

## நடைமுறைப்படுத்தப்பட்ட சத்தியம்

புதிய ஏற்பாட்டின் சபையான முதற்பேறானவர்களின் சபையானது முதற்பேறானவர்களின் சபையாக உள்ளது என்ற சத்தியமானது சபையின் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் ஆழ்ந்த சிறப்புள்ள தனிப்பட்ட பதில்செயல் ஒன்றை வெளிக் கொண்டு வர வேண்டும், இது நம்மை கிறிஸ்துவிடம் அடையும்படியும் மனிதரிடம் செல்லும்படியும் ஏவ வேண்டும். இந்த சத்தியத்தைக் குறிப்பாக வாழ்வில் நடைமுறைப் படுத்துவது எவ்வாறு?

*முதலாவது, நாம் நிறைந்து வழிந்தோடும் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும்.* தேவன் நம்மை இரட்சித்தது மட்டுமின்றி, மிக உயர்வான மதிப்புள்ள இடம் ஒன்றையும் நமக்குக் கொடுத்துள்ளார். அவர் நம்மை அவருடைய சபையாக ஆக்கியது மட்டுமின்றி, முதற்பேறானவர்களின் சபையாக, இரட்டிப்பான மதிப்புக்கொண்ட சபையாக ஆக்கியும் உள்ளார்! இந்த வெளிச்சத்தில், "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் ..." (1 தெச. 5:18) என்ற பவுலின் அறிவுத்துதலுக்குக் கீழ்ப்படிதல் என்பது நமக்குக் கடினமானதாய் இருக்கக் கூடாது.

*இரண்டாவது, நாம் மற்றவர்களுக்கு தேவனுடைய கிருபையின் வெளிப்பாடாக இருக்க வேண்டும்.* அவருடைய கிருபையானது இயேசுவின் நபர்த்துவத்தில் நமக்கு வெளியாயிற்று (தீத்து 2:11); மற்றும் ஒரு சிறிய ஆனால் மிக முக்கியமான கருத்தமைவில், நாம் நம் மூலமாகவும் நம்மைச் சுற்றிலும் அவருடைய கிருபையைத் தோன்றச் செய்ய இயலும். தேவன் நம் மீது ஊற்றியுள்ள இந்த ஆச்சரியமான மதிப்பை அதைப்பற்றி அறியாதவர்களுக்கு இதைப் பகிர்ந்து கொள்ள நாம் விரும்புகின்றோம்.

*மூன்றாவது, நம்மை அந்தகாரத்தின்னின்று அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்தில் வரவழைத்த தேவனுடைய புண்ணியங்களைப் பற்றி நாம் வியப்புற வேண்டும்;* ஏனெனில் முன்னே நாம் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, ஆனால் இப்பொழுது நாம் தேவனுடைய ஜனங்களாக இருக்கின்றோம் (1 பேது. 2:9, 10). தேவனுடைய கிருபைக்காக அவரைத் துதித்தல் என்பது சுவாசித்தல் போல நமக்கு இயல்பானதாயிருக்க வேண்டும்.

*நான்காவது, நாம் தேவனுக்குச் சொந்தமான ஜனங்கள் என்ற வகையில் தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட வேண்டும்.* நாம் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெற்றுள்ளபடியால், பயத்தோடும் நடுக்கத்தோடும் தேவனுக்கு ஊழியம் செய்வதன் மூலம் (எபி. 12:28) நன்றியுணர்

*வைக் காண்பிக்க வேண்டும். நாம் நமது சரீரங்களை தேவனுக்கு ஜீவனுள்ள மற்றும் பரிசுத்தமான பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1).*

## *முடிவுரை*

*எபிரெயருக்கு நிருபம் எழுதியவரின் கூற்றுப்படி, புதிய ஏற்பாட்டின் சபையானது முதற்பேறானவர்களின் சபையாக உள்ளது. இந்த உலகத்தின் வீண்பெருமையானது பயனற்ற சாம்பலாகவும் காய்ந்துபோன களைகளாகவும் ஆவதற்குக் காரணமாகும் நித்தியமான பரலோக மகிமையைத் தேவன் தமது சபைக்கு அருளியுள்ளார்.*

*நாம் தேவனுடைய கிருபையை இழந்து போகக் கூடாது என்பதற்கு எழுத்தாளர், ஏசாவின் உதாரணத்தைக் கொண்டு நம்மை எச்சரித்தார் (எபி. 12:15, 16). உண்மையற்ற தன்மையினால், விசுவாசமின்மையினால் நாம் பெற்றுள்ள நித்திய ஆசீர்வாதங்களை நாம் இழந்து போக முடியும் (1 பேது. 1:10-13). ஏசா என்பவன் நித்தியத்திற்காக இன்றி அந்தக் கணப் பொழுதுக்காக மட்டுமே வாழ்ந்திருந்த தீட்டுள்ள மனிதனாக இருந்தான்.*

*"தீட்டு" என்ற வார்த்தையானது தோற்றத்தில் உலகத்துடன் தொடர்பு படுத்தப்பட்டது. இது profanus என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகின்றது. ஒவ்வொரு கோவிலின் (இலத்தீன்: fanum) வெளிப்புறத்திலும் ஒவ்வொருவரும் அனுமதிக்கப்படும் பகுதி ஒன்று இருந்தது. இந்தப் பகுதிக்கு நேர்மாறான வகையில் கோவிலின் பகுதியானது மூடப்பட்ட தாயிருந்தது. இது பரிசுத்தமான பகுதியாகக் கருதப்படுகையில், மக்கள் யாவரும் கூடும் திறந்த வெளியிடமானது தீட்டான பகுதியாகக் கருதப்பட்டது. ஏசா தீட்டுள்ள மனிதனாக இருந்தான்; அவனுடைய வாழ்வில் அவன் பரிசுத்தமான உறைவிடத்தைக் கொண்டிருக்கவில்லை, அவன் பரிசுத்தமான, மாறுபடக் கூடாத ஆத்துமாவைக் கொண்டிருந்த தில்லை. அவன் தனது பிறப்புரிமையை விற்றுப் போட்ட தனது செயலில் தனது பண்பையும், தனது உள்ளான மதிப்பீடுகளையும் வெளிப்படுத் தினான். அவன் நித்தியம் பற்றிய கண்ணோட்டமின்றி, ஒரு பொருள் போல வாழ்ந்தான், அவன் சரீரப் பிரகாரமானவைகள் மட்டுமே தனது நோக்கம் மற்றும் அடைவிடமாக உள்ளன என்ற வகையிலேயே வாழ்ந்தான். பிற்பாடு, ஏசா தனது ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பிய பொழுது, அது அவனுக்கு மிகவும் தாமதமாகியிருந்தது. அவன் விலைமதிப்பற்ற தனது தகுதிகளை விட்டுக் கொடுத்திருந்தான், மனந்திரும்புதலுக்கான நாளும் கடந்து விட்டிருந்தது.*

*ஏசாவின் வீணான மற்றும் தீட்டான வாழ்வு உங்களை, சபையார் என்ற வகையில் கிடைக்கும் நித்திய மதிப்பின் மீது கவனம் செலுத்தும் தேவை குறித்து எச்சரிக்கை செய்யட்டும். ஜீவனுள்ள தேவனுடைய சொந்த உடமையான முதற்பேறானவர்களின் சபையாராக இருப்பதிலிருந்து ஏதொன்றும் உங்களை விலக்கி விடாதிருக்கட்டும். இதற்கு முன்பு நீங்கள் ஒருபோதும் மதிப்பளிக்கப்படாத வகையில் தேவன் உங்களுக்கு மதிப்பளிக்கக் காத்திருக்கிறார். மனிதர்கள் உங்களை அழிந்துபோகும்*

கிரீடங்களால் மட்டுமே கனப்படுத்த முடியும், ஆனால் தேவன் இப்பொழுது உங்களுக்கு உண்மையான வாழ்வையும் பிற்பாடு நித்திய ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க முடியும்.

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. கனம் என்றால் என்ன?
2. வேதாகமத்திலுள்ள ஏதாவது ஒரு நபரைப் போல வாழ நீங்கள் தேர்ந்து கொள்ள முடியுமென்றால், நீங்கள் யாரைத் தேர்ந்து கொள்வீர்கள்? ஏன் என்பதற்கு உங்கள் காரணத்தைக் கொடுக்கவும்.
3. எபிரெயர் 12:24ல் உள்ள ''வந்து சேர்ந்தீர்கள்'' என்ற வார்த்தைகள் எதைக் குறிப்பிடுகின்றன?
4. எபிரெய நிருபம் எழுதப்பட்ட கிறிஸ்தவர்களின் சூழ்நிலைகளை விவரிக்கவும்.
5. உண்மை நிறைந்த இஸ்ரவேலர்கள் பெற்றிராததும், கிறிஸ்தவர்கள் பெற்றுள்ளதுமான ஆசீர்வாதங்கள் சிலவற்றைப் பட்டியலிடவும்.
6. "முதற்பேறானவர்" என்ற சொற்றொடர் வேத வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு வழிமுறைகளை விவரிக்கவும்.
7. ''முதற்பேறானவர்'' என்பது இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுது எவ்வாறு பயன்படுத்தப்பட்டது?
8. "முதற்பேறான" என்பது சபையைக் குறிக்க எவ்வாறு பயன் படுத்தப்பட்டுள்ளது?
9. சபையில் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள மாபெரும் கனத்தை ஒளியூட்டும் விவரிப்புகளைத் தரவும்.
10. பரலோகத்தில் ஒருவருடைய பெயர் எழுதப்பட்டிருத்தல் என்பதன் அர்த்தத்தை விளக்கவும்.
11. எபிரெயர் 11:39, 40ல் "விசேஷித்த நன்மையானது" என்பதை விளக்கப்படுத்தவும்.
12. கிறிஸ்துவுக்குள் நம் மீது பொழியப்பட்டுள்ள கனத்திற்கு நாம் எவ்விதத்தில் பதில் செய்ய வேண்டும்?